## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 10/2022

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஞானசேகர் நாயுடு | மதம் | : இந்து |
| த/பெ | : வெங்கடாசலம் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : அக்ரஹாரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**20.01.2025**

<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவு என்றால் என் சித்தப்பா பிள்ளைகள். என் சித்தப்பா செங்கம்ம நாயுடுதான் என்னை வளர்த்து படிக்க வைத்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். செங்கம்ம நாயுடுக்கு எத்தனை அண்ணன் தம்பிகள் என்றால் 4 பேர். அந்த 4 பேரின் குழந்தைகளையும் செங்கம்ம நாயுடுதான் வளர்த்தார் என்றால் சரிதான். கூட்டு குடும்ப சொத்துக்களில் வருமானம் வரக்கூடிய தென்ந்தோப்பு மாந்தோப்பு போன்ற சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். செங்கம்ம நாயுடு தினசரி வேலை செய்தால்தான் வருமானம் என்றால் சரிதான்.

2. 06.02.2002 தேதியிட்ட பதிவு செய்த செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் அவர் வளர்த்த நான் உள்ளிட்ட அனைத்து பிள்ளைகளுக்கும் சொத்துக்களை பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். கூட்டு குடும்ப சொத்து முழுமையும் பிரித்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். எங்களுக்குள் தகராறு ஏற்பட்டு மனகசப்பு வந்ததால் 06.02.2002 தேதியிட்ட பதிவு செய்த செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் தகராறு மனகசப்பு இல்லை. சொத்துக்களை பிரித்து கொடுத்தார். 06.02.2002 தேதியிட்ட பதிவு செய்த செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய பின்பு நானும் என் சித்தப்பாவும் நல்ல உறவில் இல்லை என்றாலும் தனியாக போய்விட்டோம் என்றாலும் சரிதான்.

3. 2002 செட்டில்மெண்ட் ஆவணத்தில் வழக்கு சொத்து குறிப்பிட்டு

எனக்கு சொல்லவில்லை என்றால் பத்திரத்தில் சொல்லவில்லை. ஆனால் எங்களுக்கு என்று சொல்லி நாங்கள் அனுபவித்து வந்தோம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தாவா சொத்து செங்கம்ம நாயுடுவின் வாரிசுகளுக்கு சொந்தமான சொத்து என்றாலும் சரியல்ல. தாவா சொத்து செங்கம்ம நாயுடுவின் வாரிசுகளுக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்து என்பதால்தான் 2002 செட்டில்மெண்ட் ஆவணத்தில் வழக்கு சொத்தை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

4. வழக்கு சொத்தில் எனக்கு பங்கிருந்தால் 2002 செட்டில்மெண்ட் ஆவணத்திலேயே எனக்கு எழுதியிருப்பார்கள் என்றாலும் எனக்கு அந்த சொத்தில் எந்த பங்கும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் கூட்டு அனுபவித்தில் இருந்திருந்தால் என் பெயரும் பட்டாவில் இருக்கும் என்றாலும் நான் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. 2002 ல் செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்பு சுமார் 20 வருடங்கள் நான் வழக்கு சொத்தை பொறுத்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு எந்த பிரச்சனையும் வராததால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

5. என் சித்தப்பா செங்கம்ம நாயுடு எந்த வருடம் இறந்தார் என்றால் 25.01.2006 ஆகும். 2006 க்கு பிறகும் நான் சொத்து என்னுடையது என்று நான் எந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரிதான். அவர்கள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை. எனவே நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போதும் சொத்து என்னுடையது என்று நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சொத்து எங்களுடையதுதான். தற்போதும் நான் வழக்கு சொத்து என்னுடையது என விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் சொத்து என்னுடையது என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6. உண்மையில் சொத்தில் எனக்கு உரிமை இருந்திருந்தால் முறையான நீதிமன்ற கட்டணம் செலுத்தில் முறையான பரிகாரம் கோரியிருப்பேன் என்றால் சரியல்ல. 08.01.2006 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் வீட்டு மனை என்றாலும் வழக்கு சொத்து இல்லை என்றாலும் சரிதான். தாவா சொத்திற்கும் வா.சா.ஆ 6 செட்டில்மெண்ட் ஆவணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 பட்டா செங்கம்ம நாயுடு பெயரில் உள்ளது என்றாலும் என் பெயரில்

இல்லை என்றாலும் சரிதான். வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருப்தை காட்ட வரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதே போல் என் பெயரில் எந்த அடங்கலோ, சிட்டாவோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. உண்மையிலேயே சொத்து என்னுடையதாக இருந்திருந்தால் நான் 2006 லேயே நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் செங்கம்ம நாயுடுவின் வாரிசுகளை மோசம் செய்யவேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து செங்கம்ம நாயுடுக்கு தனிப்பட்ட சொத்து என்றாலும் அது தற்போது 2 ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட சொத்து என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 5 கிராம நிர்வாக அலுவலரிடம் சான்றொப்பம் பெறப்பட்டுள்ளது என்றாலும் உரிய அதிகாரியிடம் சான்றொப்பம் பெறப்படாததால் அது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)